**வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் - 2017 சனவரி 01 முதல் 2020 திசெம்பர் 31 ஆந்**

---

வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் 2017 சனவரி 01 முதல் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த காலப்பகுதிக்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 1970 இன் 33 ஆம் இலக்க இலங்கை அரச கூட்டுத்தாபன சட்டம் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2017, 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதுகின்ற கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன.

**1.1 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

நிதிக்கூற்றுக்களை சிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளுக்கான (SLFRS for SMEs) இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.1.1 நிதிக்கூற்றுக்கள்**

**1.1.2 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தினால் 2017, 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்குரிய நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br>மேலும் நிறுவனத்தினால் பயன்படுத்தப்பட்ட கணனி சேவர் இயந்திரம் செயலிழந்தமையின் பின்னர் 2019 ஆம் ஆண்டு யூலை மாதத்தின் போது ரூபா 282,000 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட புதிய சேவர் இயந்திரம் 2021 சனவரி 30 ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் சேவர் | இதுவரை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

இயந்திரம் செயலிழக்கும் சந்தர்ப்பத்தின் போது மீள் சேமிப்பு (Backup) வைத்துக் கொள்ளப்படாமையின் காரணமாக கணக்குகள் தயாரிப்பதற்கு தேவையான தகவல்கள் அழிவடைந்ததாக காண்பிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான கணக்காண்டுகளுக்குரிய கணக்கறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.2.1 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தற்போதுள்ள நிதிக் கஷ்டங்களை வெற்றி கொண்டு விரைவாக வளர்ந்துவரும் நிர்மாண கைத்தொழிலை வலுப்படுத்தும் தரப்பினருக்கு கட்டிட பொருட்களை கூட்டுத்தாபனத்திற்கு இலகுபடுத்தும் வகையில் திறைசேரி பிணையின் அடிப்படையில் 2018 மார்ச் 28 ஆந் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தில் இலங்கை வங்கியினால் ரூபா 500 மில்லியன் கடன் தொகையொன்று 2018 செப்தெம்பர் 28 ஆந் திகதி கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அதில் வங்கியினால் அறவிட வேண்டியிருந்த ரூபா 199,052,329 தொகை குறைக்கப்பட்டு வழங்கப்பட்ட மிகுதிப் பணமான ரூபா 301,377,920 தொகையில் 21 சதவீத அளவான ரூபா 105,977,098 கடன் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்கு முரணாக செலவிடப்பட்டிருந்தது. இந்த கடன் பணத்தை தீர்த்து வைப்பதற்கு கூட்டுத்தாபனத்தால் தவறியிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வட்டி தவணைப்பணம் ரூபா 102,408,382 ஆகக் காணப்பட்டது. | கருத்துரை தெரிவிக்கப்படவில்லை. | கடன் பெற்றுக் கொள்ளும் நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2004 சனவரி முதல் 2013 திசெம்பர் வரை ஊழியர் சேமலாப நிதியம் குறித்துரைத்த பிரகாரம் செலுத்தப்படாமையினால் நீதிமன்ற கட்டளையின் அடிப்படையில் ரூபா 3,982,512 மிகைக் கட்டணம் செலுத்த வேண்டியிருந்ததுடன் பணிக்கொடைப் பணம் 2006 யூன் 16 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த போதிலும் குறித்த திகதியில் செலுத்தப்படாமையினால் நீதிமன்ற கட்டளையின் அடிப்படையில் ரூபா 79,191 மிகைக் கட்டணமும் செலுத்த வேண்டியிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | ஊழியர் சேமலாப நிதியை குறித்துரைத்த பிரகாரம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) நீதிமன்ற கட்டளையின் அடிப்படையில் செலுத்த வேண்டிய கொடுப்பனவுகள் | | | |
| 02 தரப்பினருக்காக நீதிமன்ற கட்டளையின் அடிப்படையில் கூட்டுத்தாபனத்தால் செலுத்த வேண்டிய ரூபா 24,026,959 தொகையில் மேலும் செலுத்த வேண்டியிருந்த பணம் ரூபா 10,626,959 ஆகும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நீதிமன்ற கட்டளைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த துடன் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முன் வழங்குனருக்கு பணத்தை செலுத்துவதற்கு கண்காணித்துக் கொள்ளல் வேண்டும். |

## 1.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) 4.2.6 ஆம் பந்தி | காலாண்டு, அரையாண்டு, வருடாந்த செயலாற்றல் அறிக்கை வரிசை அமைச்சிற்கும் திறைசேரிக்கும் காலாண்டு முடிவடைந்து 30 தினங்களுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டு காலப்பகுதிக்குரிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) 4.3 ஆம் பந்தி | பணிப்பாளர் சபைத் தீர்மானம் வரிசை அமைச்சிற்கு 10 தினங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2020 ஆண்டுக்குரிய | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தீர்மானங்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) | 7.4.1 ஆம் பந்தி | ஆகக்குறைந்தது 03 மாதங்களுக்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டம் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும் 2017 சனவரி 01 முதல் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் எந்தவொரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டமும் நடாத்தப்பட்டிருக்கவில்லை | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | 8.2.2 ஆம் பந்தி | நிலையான வைப்புக்களில் பணத்தை முதலீடு செய்வதற்கு முன்னர் நிதி அமைச்சரின் இணக்கப்பாடு பெறப்பட வேண்டியிருந்த போதிலும் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது வைப்புச் செய்யப்பட்ட ரூபா 24 மில்லியன் தொகையான நிலையான வைப்புக்கள் மற்றும் 2019 இல் முதலீடு செய்யப்பட்ட ரூபா 120 மில்லியன் முதலீடுகள் தொடர்பாக அவ்வாறான இணக்கப்பாடு பெறப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | 8.3.3 (அ) பிரிவு | மிகையூதிய படி செலுத்துவதற்கு தகைமை பெறுவதற்காக முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் அந்த ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எனினும் 2017, 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் நிதிக்கூற்றுக்கள் அறிக்கை திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்படாதிருந்த போதிலும் 2017, 2018, 2019 ஆம் ஆண்டுகளில் மிகையூதிய படியாக ரூபா 1,550,264 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | 9.2(ஆ) ஆம் பந்தி | கூட்டுத்தாபனத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் காணப்படவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vii) | 9.3.1(i), (vi), (vii) ஆம் பந்திகள் | பெறப்பட வேண்டிய சரியான அங்கீகாரத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமானதாக காணப்படாததுடன் பதவிகளின் கடமைகளை மேவுகை செய்வதற்காக சந்தர்ப்பம் வழங்கப்பட முடியாதிருந்த போதிலும் தவிர்க்க முடியாத காரணங்களின் அடிப்படையில் அவ்வாறு வழங்கப்பட்ட போதிலும் அது 03 மாதங்களை விஞ்சாதிருத்தல் வேண்டும். எனினும் நிறைவேற்று தரத்தின் பதவியொன்று ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் முதல் கடமை மேவுகையின் கீழ் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.2.6 ஆம் பந்தி மற்றும் 3.2.7 ஆம் பந்தி | ஒவ்வொரு ஆண்டிற்கும் உரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கை அடுத்துவரும் ஆண்டின் யூன் 30 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டு அது தொடர்பாக யூன் 30 ஆந் திகதிக்கு முன்னர் அரச நிதி பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2017, 2018, 2019 மற்றும் 2020 ஆண்டுகளுக்காக கணக்காய்வு திகதி வரையிலும் பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | திறைசேரி செயலாளரின் 2017 யூன் 28 ஆந் திகதிக்குரிய | நிறுவனத்தினால் அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடப் பொருட்கள் தொடர்பான தகவல்கள் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| MF/CG/02/(Cir) ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் இலக்கம் 01/2017 | சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | வேண்டும். |

**2. செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 செயலாற்றல்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| ‘‘உயர்ந்த தரத்தினையுடைய கட்டிடப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் போட்டியாளர் விலைக்கு நாடு முழுவதும் வழங்குதலை முன்னுரிமைப்படுத்துதல் மற்றும் அரச நிறுவனமொன்றாக சமூக பொறுப்புக்களை நிறைவேற்றும் வகையில் இலங்கை மக்களுக்கு ஆகக்கூடிய நம்பிக்கையினை கட்டியெழுப்புதல்’’ நிறுவனத்தின் தூரநோக்காகும். எனினும் தற்போது வரையிலும் பிரதான அலுவலக வளவில் நவீனமயப்படுத்தப்பட்ட காட்சிக்கூடம் மற்றும் கிளை அலுவலகங்களில் தனியார் கட்டிட உபகரணங்கள் வழங்குனர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட கட்டிட பொருட்கள் மற்றும் உபகரணங்கள் இலாப எல்லையுடன் விற்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன் இதன் பிரகாரம் கூட்டுத்தாபனம் தாபிக்கப்பட்டதன் நோக்கம் மற்றும் கூட்டுத்தாபனத்தின் தூர நோக்குகளை மேவுகை செய்யாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட 2013 முதல் 2016 வரையான 04 கால வருடங்களின் போதும் தேறிய நட்டம் ரூபா 15 மில்லியன் முதல் ரூபா 94 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கூட்டுத்தாபனத்தின் நோக்கம் மற்றும் இலக்குகள் தொடர்பில் கவனம் செலுத்தி நட்டத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.2 நிகழத்தக்க பொறுப்புக்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டு வரையில் வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக நீதிமன்றத்தில் 13 வழக்குகள் விசாரணையில் காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சட்டரீதியான நடவடிக்கைகளுக்கு உட்படாத வகையில் நிறுவனம் செயற்பட வேண்டும். |

**2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொழும்பு 10 சங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ள 04 றூட் 31.4 பேர்ச் அளவான 03 காணிக்கூறுகளின் அளவிற்காக ரூபா 222.50 மில்லியன் விற்பனை உரித்துறுதி மூலம் கூட்டுத்தாபனத்திற்கு பெறப்பட்டிருந்தது. 2012 சனவரி 31 ஆந் திகதிக்கு முன்னர் ரூபா 359.32 மில்லியன் தொகையொன்று வீடமைப்பு அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனத்திற்கு (HDFC) செலுத்தப்பட்டு காணிகளின் உரித்தை விடுவித்துக் கொள்வதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு தீர்ப்பின் தீர்மானம் கிடைத்திருந்த போதும் கூட்டுத்தாபனம் அவ்வாறு செலுத்தாமையினால் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தினால் காணிகளை விடுவிக்கும் உரித்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | உரிய பணத்தை தீர்த்து காணியை சரியான பிரகாரம் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஸ்ரீ சங்கராஜ மாவத்தை கொழும்பு 10 இல் அமைந்துள்ள கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணியில் 100 பேர்ச் அளவு இலங்கை வங்கிக்கு ரூபா 70 மில்லியனுக்கு விற்பனை முறியின் மூலம் கையளிக்கப்பட்டிருந்ததுடன் பின்னர் கூட்டுத்தாபனத்தினால் 2018 ஒக்தோபர் 23 ஆந் திகதி இலங்கை வங்கியிலிருந்து பெறப்பட்ட ரூபா 500 மில்லியன் கடன் தொகையில் இந்த தொகையுடன் கடன் மேலதிக தொகையுடன் செலுத்த வேண்டிய வட்டியையும் உள்ளடக்கி ரூபா 199,052,329 தொகையொன்று ஈடுசெய்யப்பட்டு தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ள உரித்துறுதியின் பெறுமதிக்கு உரிய முத்திரைக் கட்டணமான ரூபா 5,383,174 தொகை செலுத்தி மீண்டும் காணி கையேற்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 நவம்பர் 01 ஆந் திகதி வரையிலும் அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | உரிய முத்திரைக் கட்டணத்தை செலுத்தி காணியை சரியான பிரகாரம் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலக்கம் 417/ஏ, கடை வீதி கிழக்கு, புகையிரத நிலைய வீதி மாத்தறை என்ற காணியில் 01 றூட், 2.8 பேர்ச் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் அனுமதியற்ற வகையில் பயன்படுத்தப்படுவதுடன் நிறுவனம் அது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | காணிகளின் பாதுகாப்பு தொடர்பாக கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கூட்டுத்தாபனத்தின் கீழ் உள்ள 05 ஏக்கர், 02 றூட் 12 பேர்ச் அளவான காணி மற்றும் 05 வீடுகளுக்காக இதுவரை உரித்துறுதியை பெற்றுக் கொள்ளாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | உரித்துறுதியை பெற்றுக் கொள்வதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 02 ஏக்கர் 03 றூட் 14.5 பேர்ச் அளவான 09 காணிகளுக்காக நில அளவையாளர் வரைபடம் காணப்படவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நில அளவையாளர் வரைபடத்தை தயாரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | இல. 549/A பொறுப்பன, மொறட்டுவ என்ற காணியின் கையளித்தலை பெற்றுக் கொள்வதற்காக 2019 ஆகஸ்ட் 21 ஆந் திகதிய அமப/19/2192/122/076 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் காணியின் உரித்து கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்கு வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதும், கூட்டுத்தாபனத்தினால் காணியின் உரித்திற்குரிய உரித்துறுதியை எழுதிக்கொள்வதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | உரித்துறுதியை எழுதிக் கொள்வதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான இலக்கம் 325 ஸ்ரீ பொன்னம்பலம் வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள 01 றூட் 31.6 பேர்ச் அளவான காணி பண்டுகம அனுராதபுர வீடமைப்பு, நுவரெலியா பம்பர கெலே கட்டிடம், எம்பிலிப்பிட்டிய யோதகமயில் 02 வீடுகள் என்பன பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | காணியைப் பாதுகாத்துக் கொள்வதுடன் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | தேசிய லொத்தர் சபையின் சேவை நடவடிக்கைகளுக்காக இல. 541 ஸ்ரீ சங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ள கூட்டுத்தாபன கட்டிடத்தில் களஞ்சிய | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சொத்துக்களை மதிப்பீடு செய்து அதன் பிரகாரம் களஞ்சியத்தை வாடகைக்கு வழங்குதல் |

| | | | |
|---|---|---|---|
| | இலக்கம் 1, 2, 3, 4, 5, 6 மற்றும் 7 என்ற களஞ்சியங்கள் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கை புதுப்பிக்கப்படாமல் 2015, 2016, 2017 ஆம் ஆண்டுகளின் விலையில் 2020 ஆம் ஆண்டின் போதும் அந்தக் களஞ்சியம் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும் இந்தக் களஞ்சியத்திற்காக 2018 யூலை முதல் 2021 சனவரி வரை செலுத்த வேண்டிய ரூபா 60,382 தொகையான மின்சார பட்டியல் தேசிய லொத்தர் சபையினால் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். |
| (ஐ) | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான கட்டிடமொன்று மாத்தறை இலங்கை சதொச விற்பனை நிலையத்திற்காக வழங்கப்பட்டிருந்ததுடன் 2019 யூலை மாதம் முதல் அந்தக் கட்டிடம் செயற்பாடற்றுக் காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சொத்துக்களை முழுமையான பயன்பாட்டிற்கு உட்படுத்துதல் வேண்டும். |
| (ஒ) | சங்கராஜ காட்சிக் கூடத்தில் 500 சதுரஅடி அளவு தனியார் நிறுவனத்திற்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நிறுவனம் 2020 சனவரி 23 ஆந் திகதி காட்சிக்கூடத்திலிருந்து விலகிச் சென்றிருந்தது. அந்த நிறுவனம் வாடகைப் பணம் ரூபா 192,500 மற்றும் மின்சார பட்டியலுக்காக ரூபா 4,196 தொகை என்பவற்றை செலுத்தியிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சொத்துக்களை முழுமையான பயன்பாட்டிற்கு உட்படுத்துதல் வேண்டும். மேலும் நிலுவைப் பணம் அறவிடப்படல் வேண்டும். |
| (ஓ) | 2015 ஏப்ரல் மாதம் முதல் ஒரு சதுர அடி ரூபா 45 வீதம் 1480 சதுரஅடிக்கு மாதமொன்றிற்கு ரூபா 66,600 தொகையில் தனியார் தரப்பினருக்கு இல. 541 ஸ்ரீ சங்கராஜ மாவத்தையில் கூட்டுத்தாபன வளவில் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான களஞ்சியமொன்று வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கை காலம் 2017 ஏப்ரல் 09 ஆந் திகதி வரையாக இருந்ததுடன் புதிய உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமல் ஆரம்ப உடன்படிக்கையின் பிரகாரம் இதுவரையும் அந்த வாடகைப் பணத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சொத்துக்களை மதிப்பீடு செய்து அதன் பிரகாரம் களஞ்சியத்தை வாடகைக்கு வழங்குதல் வேண்டும். |
| (ஔ) | தேசிய இளைஞர் படையணி (National Youth Corps) நிறுவனத்திற்கு மாதமொன்றிற்கு ரூபா 164,850 தொகையில் வழங்கப்பட்டிருந்த | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சொத்துக்களை முழுமையான பயன்பாட்டிற்கு உட்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாளிகாவ வீதி, இரத்மலானையில் அமைந்துள்ள கட்டிடம் 2019 ஒக்தோபர் மாதம் முதல் விளைவற்றுக் காணப்பட்டது.<br><br>அதன் பிரகாரம் இதுவரை நிதி கஷ்டங்களுக்கு கூட்டுத்தாபனம் உட்பட்டிருந்த நிலையில் இந்தக் கட்டிடத்தை வாடகைக்கு வழங்குவதன் மூலம் வருமானத்தை உழைத்துக் கொள்வதற்கு கூட்டுத்தாபனம் கவனம் செலுத்தியிருக்க வில்லை. | | |
| (க) | வாகன இல. 227-3173 ஆம் இலக்க லொறி வண்டி 2014 ஆம் ஆண்டு முதல் ஓட்டத்திலிருந்து நீக்கப்பட்டிருந்ததுடன் தற்போது துருப்பிடித்த நிலையில் அலுவலக வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | இந்த வாகனத்தை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கா) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமாக 14 வாகனங்கள் காணப்பட்டதுடன் இந்த வாகனங்களில் 07 வாகனங்கள் ஓட்ட நிலையில் காணப்படவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | வாகனத்தை ஓட்ட நிலைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**2.4 வங்கி கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவனத்தினால் 09 வங்கிக் கணக்குகள் பேணிச் செல்லப்படுவதுடன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 வங்கிக் கணக்குகளின் செலவு மீதி ரூபா 46,752,693 ஆக இருந்ததுடன் 04 வங்கிக் கணக்குகளின் வரவு மீதி ரூபா 37,813,477 ஆகும். 2020 ஆம் ஆண்டிற்காகவும் எந்தவொரு வங்கி கணக்கு தொடர்பாகவும் வங்கி இணக்கக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | வங்கி இணக்கங்கள் மாதாந்தம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மேற்கூறப்பட்ட 09 வங்கிக் கணக்குகளுக்கு மேலதிகமாக 2014 ஆம் ஆண்டு மற்றும் 2015 ஆம் ஆண்டு முதல் 02 வங்கிக் கணக்குகள் செயற்பாடற்றுக் காணப்பட்ட போதிலும் அந்தக் கணக்குகளை மூடுவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | செயற்பாடற்ற வங்கி கணக்குகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மக்கள் வங்கியின் 04 கணக்குகளில் இருந்து ரூபா 37,813,477 தொகையான மேலதிகப்பற்று வசதிகள் பெறப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | வங்கிக் கணக்குகளிலிருந்து மேலதிகப்பற்று வசதிகள் பெறப்படாதிருத்தல் வேண்டும். |

**3. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**3.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டுடன் பாதீடு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 கூட்டிணைந்த திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் தூரநோக்கு மற்றும் இலக்குகளை நிறைவேற்றுவதற்காக 03 வருடங்களுக்கு குறையாத காலத்திற்காக கூட்டிணைந்த திட்டம் மற்றும் அதற்கு இணைந்ததாக செயல் நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு நிதியாண்டும் ஆரம்பிப்பதற்கு 15 தினங்களுக்கு முன்னர் உரிய திட்டத்திற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |